# <u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>

**<u>முன்னிலை.</u> திருமதி.ஆர்.நந்தினி, எம்,எல்.,**

**சார்பு நீதிபதி, அரூர்.**

2017ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ம் தேதி திங்கட்கிழமை

## <u>அசல் வழக்கு எண். 81/2017</u>

1. பொன்னுரங்கன்
2. பொன்மணி ..... வாதிகள்

//எதிராக//

1. கந்தச்சியம்மாள்
2. ராதாகிருஷ்ணன்
3. பார்தீபன்
4. ஜெயலட்சுமி
5. பூபாலன்
6. ஜெயவேல்
7. சகாதேவன் .... பிரதிவாதிகள்

WEB COPY

இவ்வழக்கானது கடந்த 04.12.2017-ம் தேதி இறுதிவிசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.V.சிங்காரம்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, வாதி தரப்பு வாதங்கள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

### <u>தீர்ப்புரை</u>

தாவா சொத்துக்களை நலந்தீது கலந்து 108 சமபாகங்களாகப் பிரித்து அதில் வாதிகள் ஒவ்வொருவருக்கும் தலா 7/108 பாகம் ஒதுக்கி, ஒரு முதல் நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், தனி சுவாதீனம் பிறப்பிக்க கோரியும், 1-ம் பிரதிவாதி, 7-ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்யவும் வேண்டி, வாதிகள் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளனர்.

**<u>2. வழக்குரையின் சுருக்கம்:</u>**

தாவா சொத்து வாதிகளின் பாட்டனார் இறந்த பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பொது சொத்து என்றும், தாவா சொத்துக்களை 2, 3, 6, 7 பிரதிவாதிகளுடனும், இறந்த சின்னபையன் என்பவருடனும் ஏகு குடும்பமாக பெருமாள் கவுண்டர் அனுபவித்து வந்து, தாவா சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இன்டஸ்டேட்டாக 2005-ம் வருடம் இறந்துவிட்டார் என்றும், ஏக குடும்ப சொத்துக்களிலிருந்து வரும்

வருவாயைக்கொண்டு பெருமாள் கவுண்டரும். 2 முதல் 7 பிரதிவாதிகளும் ஒன்று சேர்ந்து வாதிகளின் பாட்டியான 1-ம் பிரதிவாதி பெயரில் ஏககுடும்பத்திற்காக வேண்டி அரூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1072/1986, 1291/1987 மற்றும் 1672/1993 கிரய பத்திரங்கள் படி கட்டவடிச்சாம்பட்டி கிராம சர்வே எண்.110/1B, 110/1C, 110/1D நிலங்கள் பெயரளவில் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றும், 1-ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்தில் தனிப்பட்ட பாத்தியமோ, சுவாதீன அனுபவமோ, உரிமையோ கிடையாதென்றும், கட்டவடிச்சாம்பட்டி கிராம சர்வே எண்.110/1B, 110/1C, 110/1D நிலங்களை ஏக குடும்பத்திற்காக 1-ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெற்ற நாள் முதல் வாதிகளும், 2 முதல் 7 பிரதிவாதிகளும் யாதொரு பாகப்பிரிவினையுமின்றி நாளதுவரை ஒன்றாகவே அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்துக்களை வாதிகளுடனும், பிரதிவாதிகளுடனும் ஏககுடும்பமாக கூட்டு சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வந்த 4-ம் பிரதிவாதியின் கனவர் சின்னபையன் என்பவர், 4, 5 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு 2001-ம் வருடம் இறந்துவிட்டார் என்றும், மேற்படி சின்னபையன் இறந்த பிறகு 4, 5 பிரதிவாதிகள் வாதிகளுடனும், 1 முதல் 3 மற்றும் 6, 7 பிரதிகளுடனும் யாதொரு பாகப்பிரிவினையுமின்றி ஒன்றாக ஆண்டு அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள் என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளை கட்டுப்படுத்தக்கூடிய பொதுக்குடும்ப கடன்கள் ஏதுமில்லை என்றும், இவ்வாறிருக்கையில் வாதிகளின் தகப்பனார் 3-ம் பிரதிவாதி கடந்த 10 வருடமாக குடி, சூதாட்டம் போன்ற தீய பழக்க வழக்கங்களுக்கு ஆட்பட்டு, விவசாய காரியங்களில் சரிவர ஒத்துழைக்காமல், ஊதாரி வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்றும், அதை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட 1, 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களிலிருந்து வரும் வருவாயையும், மகசூலையும் வாதிகளுக்கு பிரித்துக்கொடுக்காமலும் கணக்கு காட்டாமலும் விவசாய காரியங்களில் சரிவர ஒத்துழைக்காமலும், கடந்த ஒரு வருடமாக ஏமாற்றி வந்தார்கள் என்றும், அதனால் வாதிகள் இனியும் தாவா சொத்துக்களை ஒன்றாக அனுபவிக்க இயலாதென்பதால், தாவா சொத்துக்களில் வாதிகளுக்குச் சேரவேண்டிய 14/108 பாகத்தை பிரித்து தக்க ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கும்படியும், தனி சுவாதீனம் செய்துகொடுக்கும்படியும், கடந்த 6 மாதமாக கேட்டதற்கு பிரதிவாதிகள் இன்று, நாளை என காலம் கடத்தி வந்ததாகவும், 3-ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளின் சொல்பேச்சைக் கேட்டுக்கொண்டு, தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு சேர வேண்டிய பங்கு பாகத்தை 2, 3 மற்றும் 6, 7 பிரதிவாதிகள் பெயரில் எழுதிவைக்க போவதாகவும், கடந்த 3 மாதத்திற்கு முன்பு ஊரில் பவுரசம் கூறிக்கொண்டு, வாதிகளின் பங்கு பாகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வந்தார்கள் என்றும், அதனால் வாதிகள் ஊர்பொதுவர்களையும், உறவினர்களையும் வைத்து பிரதிவாதிகளிடம் கடைசியாக

WEB COPY

கடந்த 15.04.2017-ம் தேதி தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு உண்டான பங்கு பாகத்தை பிரித்து தனிசுவாதீனம் செய்து கொடுக்கும்படியும், தக்க ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கும்படியும் கேட்டதற்கு 7-ம் பிரதிவாதி 1, 2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளின் சொல்பேச்சை கேட்டுக்கொண்டு வாதிகளுக்கு பங்கு பாகம் கொடுக்க முடியாது என்றும், முடிந்தால் பாகம் பெற்றுக்கொள்ளட்டும் என்றும் கூறி மறுத்து சென்றுவிட்டார் என்றும், அவ்வாறு செய்ய அவர்களுக்கு யாதொரு சட்டமும், நியாயமும் கிடையாதென்றும், அதன்பின்னிட்டு வாதிகள் தாவா சொத்துக்களுக்கான சிட்டாவை 22.04.2017-ம் தேதி பெற்று பார்த்தபோது தான், பட்டா எண்.246, 251 ஆகியவைகளுக்கு வாதிகளின் பாட்டனார் பெருமாள் கவுண்டர் பெயரிலும், கட்டவடிச்சாம்பட்டி கிராம பட்டா எண்.19, 1-ம் பிரதிவாதி பெயரிலிருந்து 7-ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதும் வாதிகளுக்கு தெரியவந்தது என்றும், கட்டவடிச்சாம்பட்டி கிராம சர்வே எண்.110/1B, 110/1C, 110/1D நிலங்கள் சம்பந்தமாக 7-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியிடமிருந்து ஏதாவது மோசடி ஆவணங்களை எழுதி வாங்கியுள்ளாரா என 01.01.2000 முதல் 21.04.2017 தேதி வரை வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தபோதுதான், 7-ம் பிரதிவாதி ஏககுடும்ப சொத்தை 1-ம் பிரதிவாதியிடமிருந்து மோசடியாக 16.05.2013 தேதியிட்டு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி பதிவு செய்துள்ளதும், பட்டா பெற்றுள்ளதும் வாதிகளுக்கு தெரியவந்ததாகவும், 7-ம் பிரதிவாதி தாவா ச.எண்..110/1B, 110/1C, 110/1D நிலங்கள் சம்பந்தமாக 1-ம் பிரதிவாதியிடம் எழுதிப்பெற்றுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரமும், அதன் அடிப்படையில் வருவாய்துறையினர் மூலம் பெற்றுள்ள பட்டாவும் செல்லாது, வாதிகளை ஒருபோதும் கட்டுப்படுத்தாது, ரத்து செய்யத்தக்கதாகும் என்றும், இவ்வாறிருக்கையில் வாதிகள் கடந்த 02.05.2017-ம் தேதி 7-ம் பிரதிவாதியிடம் ஏன் இவ்வாறு ஏககுடும்ப சொத்தை ஒருவர் மட்டும் யாருக்கும் தெரியாமல் 1-ம் பிரதிவாதியிடம் தான செட்டில்மெண்ட் எழுதி வாங்கியுள்ளீர் என கேட்டதற்கு, 7-ம் பிரதிவாதி அப்படிதான் செய்வேன் என்றும், மீதமுள்ள சொத்தையும் 1 முதல் 6 பிரதிவாதிகளிடம் எழுதி வாங்கப்போவதாகவும், ஏககுடும்ப சொத்தில் வாதிகளுக்கு சொத்து இல்லாமல் செய்யப்போவதாகவும் மிரட்டிச் சென்றுள்ளார் என்றும், பிரதிவாதிகள் எதையும், எப்போதும் செய்யத்துணிந்தவர்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் கட்டுப்படாதவர்கள் என்றும், பிரதிவாதிகளின் சட்டவிரோத செயல்களை கனம் நீதிமன்ற தடை உத்திரவு மூலம் தான் தடை செய்ய இயலுமென்றும், தாவா சொத்துக்களில் பொதுவில் 1-ம் வாதிக்கு 7/108 பங்கும், 2-ம் வாதிக்கு 7/108 பங்கும், 1-ம் பிரதிவாதிக்கு 3/108 பங்கும், 2-ம் பிரதிவாதிக்கு 21/108 பங்கும், 3-ம் பிரதிவாதிக்கு 7/108 பங்கும், 4, 5 பிரதிவாதிகளுக்கு கூட்டாக 21/108 பங்கும், 6-ம் பிரதிவாதிக்கு 21/108 பங்கும், 7-ம் பிரதிவாதிக்கு 21/108 பங்கும்

WEB COPY

பாத்தியமும், சுவாதீனமும் ஆகும் என்றும், எனவே, பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினைக்காகவும், தனி சுவாதீனத்திற்கும், விளம்புகை பரிகாரத்திற்காகவும் வேண்டி, வாதிகள் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளனர்.

**3.** வாதி வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலானவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4.** இத்தாவாவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதிகள் கோரும் பரிகாரம் பெற வாதிகள் உரிமையுடையவர்களா? என்பதே ஆகும்.

**5.** வாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக 1-ம் வாதி, வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நிரூபண வாக்குமூலத்தில், வழக்குரையில் சமர்பித்துள்ள சங்கதிகளை அனுசரித்தே சாட்சியம் அளித்துள்ளார். தனது சாட்சியத்தில், 22.04.2017-ம் தேதி தாவா சொத்தான வாதிகளின் பாட்டனார் பெருமாள் கவுண்டர் பெயரிலுள்ள சிட்டா, பட்டாவின் கணினி நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 22.04.2017-ம் தேதி தாவா சொத்திற்கு வாதிகளின் பாட்டனார் பெருமாள் கவுண்டர் பெயரிலுள்ள சிட்டா, பட்டாவின் கணினி நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 22.04.2017-ம் தேதியிட்ட கட்டவடிச்சாம்பட்டி சொத்திற்கு 7-ம் பிரதிவாதி பெயரில் உள்ள சிட்டா, பட்டாவின் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 22.04.2017-ம் தேதி, தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்றிதழின் கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 16.05.2013-ம் தேதி, 7-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.5 ஆகவும் சமர்பித்து சாட்சியமளித்துள்ளார்.

WEB COPY

**6.** மேற்படி ஆவணங்களின் பரிசீலணையில், தாவா சொத்துக்களில் 1-ம் இன சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள பொய்யப்பட்டி கிராம சர்வே எண் நிலங்களுக்கு வாதிகளின் பாட்டனார் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் இருப்பது வா.சா.ஆ.1 மற்றும் 2-ன் மூலமாக தெரியவருகிறது. வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலானவற்றை பரிசீலித்தில், தாவா 2-ம் இன சொத்தாகிய கட்டவடிச்சாம்பட்டி கிராம ச.எண்.110/1B, 110/1C, 110/1D ஆகியவை இறந்த பெருமாள் கவுண்டரின் மனைவியாகிய 1-ம் பிரதிவாதி கந்தச்சியம்மாள் பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சொத்துக்களை 1-ம் பிரதிவாதி, 7-ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.5 ஆகிய தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி தானமாக ஒப்படைத்து, அதன் அடிப்படையில் மேற்படி சொத்துக்களுக்கு வருவாய்த்துறை ஆவணங்களிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேற்படி சொத்துக்கள் 2 முதல் 7 பிரதிவாதிகளால் 1-ம் பிரதிவாதியின் பெயரில் கிரயம் பெறப்பட்ட கூட்டுக்

குடும்ப சொத்துக்கள் என்று வாதிகள் தரப்பில் வழக்காடப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வாதிகளின் கூற்றை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாமல் அவர்கள் அனைவரும் தோன்றா தரப்பினராய் இருந்துள்ளனர். பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிகளின் வழக்கை மறுக்கவில்லை. எனவே, வாதிகளின் தரப்பு, வா.சா.1ன் சாட்சியத்தின் மூலமும், வாதிகளின் தரப்பு சான்றாவணங்களின் மூலமும் தாவா 1-ம் இன சொத்தைப் பொறுத்து நிரூபிக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, தாவா சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியவாறு பாகப்பிரிவினை பரிகாரம் பெறவும், தனி சுவாதீனம் பெறவும் வாதிகள் உரிமையுள்ளவர்கள் என்றும், தாவா 2-ம் இன சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை மற்றும் விளம்புகைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**7.** எனவே, தாவா சொத்துக்களை பொறுத்து நலந்தீது கலந்து 108 சம பாகங்களாகப் பிரித்து, அதில் வாதிகளுக்கு தலா 7/108 பாகங்களை ஒதுக்கீடு செய்தும், பிரதிவாதிகள், வாதிகளின் 7/108 பங்கு பாகத்தினை 2 மாத காலத்திற்குள் தனி சுவாதீனம் கொடுக்க வேண்டுமென்றும், தாவா 2-ம் இன சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை மற்றும் விளம்புகைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

WEB COPY

முடிவில், கீழ்கண்டவாறு தீர்ப்பும் முதல் நிலை தீர்ப்பாணையும் செலவுத்தொகையுடன் பிறப்பிக்கப்படுகின்றது.

1. தாவா சொத்துக்களைப் பொறுத்து நலந்தீது கலந்து 108 சம பாகங்களாக பிரித்து, அதில் வாதிகளுக்கு தலா 7/108 பாகங்களை ஒதுக்கி, முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், வாதிகளின் 7/108 பங்கு பாகத்தினை 2 மாத காலத்திற்குள் தனி சுவாதீனம் கொடுக்க வேண்டுமென உத்திரவிடப்படுகிறது.

2. தாவா 2-ம் இன சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியவாறு விளம்புகைப் பரிகாரம் அளித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2017-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் நாளான இன்று என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு அவையறியப் பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
அரூர்.

**<u>இணைப்பு</u>**

*1. வாதிகள் தரப்பின் சாட்சி*

*1.* திரு. பொன்னுரங்கன் (வாதி)

*2. வாதிகள் தரப்பின் சான்றாவணங்கள்*

| | | |
|---|---|---|
| *1. 22.04.2017* | தாவா சொத்திற்கு வாதிகளின் பாட்டனார் பெருமாள் கவுண்டர் பெயரிலுள்ள கணினி சிட்டா, பட்டா | - நகல் |
| *2. 22.04.2017* | தாவா சொத்திற்கு வாதிகளின் பாட்டனார் பெருமாள் கவுண்டர் பெயரிலுள்ள கணினி சிட்டா, பட்டா | - நகல் |
| *3. 22.04.2017* | 7-ம் பிரதிவாதி பெயரில் கட்டவடிச்சாம்பட்டி சொத்திற்கு மோசடியாக பெற்றுள்ள சிட்டா, பட்டா | - நகல் |
| *4. 22.04.2017* | தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்றிதழ் | - நகல் |
| *5. 16.05.2013* | 7-ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் | - நகல் |

WEB COPY

சார்பு நீதிபதி,
அரூர்.